# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2018

| தரம் - 7 | வரலாறு | நேரம் : 2.00 |
|---|---|---|

சுட்டெண் : ..............................

### பகுதி – I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

❖ சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

01. மூன்று போகங்களிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் விடயத்தினைக் கூறும் புரதான கல்வெட்டு
    1) ஹோபிடிகம கல்வெட்டு
    2) தோணிகல கல்வெட்டு
    3) கொடவாய கல்வெட்டு
    4) மும்மொழிக் கல்வெட்டு

02. சேனைகளில் பயிரிடப்பட்ட நெற் செய்கைக்கு வழங்கப்பட்ட பெயர்
    1) கரைநெல் 2) சேனை நெல் 3) பயிர்நெல் 4) விளை நெல்

03. இலம்பகர்ண வம்சத்தின் மன்னர்களுள் ஒருவர்
    1) தாதுசேனன் 2) வசபன்
    3) முதலாம் விஜயபாகு 4) இரண்டாம் சேனன்

04. 1ம் விஜயபாகுவிற்கு உதவி புரிந்த பிரபு யார்?
    1) சித்தனரும்பிப் புதல்னா 2) தேவபதிராஜா
    3) ரிஷிகிரி 4) பித்சென்

05. அப்பாறை ரஜகல தொல்பொருள் ஆய்வின் போது கண்டறியப்பட்ட நாணயம்
    1) ரஜகல நாணயம் 2) ஹஸ் எபு கஹபண நாணயம்
    3) உரோமபுரி நாணயம் 4) தம்ப மஸ்ஸ நாணயம்

06. உழைப்புக்கு உழைப்பை பரிமாறிக்கொள்ளும் முறை
    1) பண்டமாற்ற முறை 2) நிந்தம் முறை
    3) கம்பள முறை 4) அத்தம் முறை

07. ரூவான் வெலிசாயவை அலங்கரிப்பதற்கு கண்ணாடி மணிகளைப் பெறுவதற்கு உரோமாபுரிக்குத் தூதுவர்களை அனுப்பிய மன்னன்
    1) வசபன் 2) 1ஆம் விஜயபாகு 3) தாதுசேனன் 4) பாதிகாபயன்

08. வானிலிருந்து விழும் ஒருதுளி நீரேனும் விவசாயத்திற்குப் பயன்படாது கடலைச் சென்றடைய விடமாட்டேன் என்ற கொள்கையுடன் செயற்பட்ட மன்னன்

1) முதலாம் விஜயபாகு 2) மகாபராக்கிரமபாகு
3) வசபன் 4) தாதுசேனன்

09. யுனெஸ்கோ நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட உலக மரபுரிமைகளின் எண்ணிக்கை எத்தனை?

1) 60 2) 704 3) 388 4) 400

10. இலங்கையின் தென்பகுதியில் முகமூடி செய்வதில் பிரசித்தி பெற்ற இடம் எது?

1) தங்காலை 2) கமிரிச
3) அம்பலாங்கொடை 4) வெலிகம

11. யாப்பகுவ குன்றின் உச்சியில் கோட்டை அமைத்தவர்

1) 1ஆம் புவனேகபாகு 2) சுபசேனாதிபதி
3) மகாபராக்கிரமபாகு 4) சங்கசேனாதிபதி

12. கம்பளை இராசதானியைத் தலைநகர் ஆக்கிய மன்னர்

1) மூன்றாம் விஜயபாகு 2) முதலாம் புவனேகபாகு
3) நான்காம் புவனேகபாகு 4) இரண்டாம் பராக்கிரமபாகு

13. யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன்

1) ஆரிய சக்கரவர்த்தி 2) விஜய கூழங்கை
3) சங்கிலி மன்னன் 4) செகராசசேகர மன்னன்

14. ஐக்கியப்பட்ட நாட்டில் அமைதியான ஆட்சியை ஏற்படுத்தி கல்வித்துறையில் எழுச்சியை ஏற்படுத்திய கோட்டை இராசதானி மன்னன்

1) மகாபராக்கிரமபாகு 2) ஆறாம் பராக்கிரமபாகு
3) நிசங்கமல்லன் 4) 1ம் விஜயபாகு

15. கம்பளைக் காலத்தில் இலங்கைக்கு வந்த அரேபிய தேசசஞ்சாரி

1) செங்கோ 2) இபன்பதூதா 3) சந்திரபானு 4) கலிங்க மன்னன்

16. கிரேக்க அரசில் பிரசித்தி பெற்றிருந்த இரு நகரங்கள்

1) ஒலிம்பஸ், ஸ்பாட்டா 2) கொறிந், ஏதென்ஸ்
3) எதென்ஸ், ஸ்பாட்டா 4) தீபஸ், கொறிந்

17. தலதாசிரித இலக்கியம் எழுதப்பட்ட இராசதானி

1) குருநாகல் இராசதானி 2) யாப்பகுவ இராசதானி
3) கம்பளை இராசதானி 4) யாழ்ப்பாண இராசதானி


kalvi.lk

18. உலகின் ஏழாவது அதிசயங்களுள் ஒன்றாக விளங்குவது
1) பாதீனிய தேவாலயம் 2) கொலோசியம் விளையாட்டரங்கம்
3) அதீனா தேவதை 4) உரோமானிய பாலம்

19. கிரேக்க காலத்தில் தோன்றிய தத்துவ ஞானிகளில் ஒருவர்
1) றெமியுலஸ் 2) சோக்கிரட்டீஸ் 3) ஒடிசி 4) ஜூலியஸ் சீஸர்

20. உரோமானிய நாகரிகத்தால் உலகிற்கு கிடைத்த நன்கொடை
1) கிறிஸ்தவ சமயமும் உரோமானிய சட்டங்களும்
2) நகர அரச முறை
3) அதீனா தேவாலயமும் கட்டடக்கலையும்
4) இலியட் ஒடிசி வீரகாவியங்கள்

(20x2=40புள்ளிகள்)

## பகுதி – II

❖ முதலாம் வினா உட்பட்ட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01.

அ) தரப்பட்ட இலங்கைப் புற உருவப்படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.

மாதோட்டம், அனுராதபுரம், சிகிரியா, மகாவலி கங்கை, யாழ்ப்பாணம், கதிர்காமம்.

(6 புள்ளிகள்)

ஆ) i) மூன்றாம் தவணையில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகை எது? (1 புள்ளி)

ii) இக் கணிப்பீட்டை மேற்கொண்ட பாட அலகு எது? (1 புள்ளி)

iii) இக் கணிப்பீட்டுக்கு நீர் பயன்படுத்திய தரஉள்ளீட்டுப் பொருட்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

iv) இக்கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

02.

i) எமது நாட்டு மக்கள் வாழ்வாதாரத்திற்காக மேற்கொண்ட இரு தொழில்களைத் தருக. (2 புள்ளிகள்)

ii) பெருங்குளங்களைக் கட்டி நீர்பாசனத் துறைக்குப் பணியாற்றிய அனுராதபுரக்கால மன்னர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)

iii) சேற்று நிலப்பயிர்ச் செய்கையின் விசேட அம்சங்கள் இரண்டு தருக. (3 புள்ளிகள்)

iv) புராதன காலத்தில் எமது நாட்டு மக்களின் திருமணம், மரணச்சடங்குகளில் பின்பற்றப்பட்ட பழக்கவழக்கங்கள் பற்றிக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

03.

i) அனுராதபுர காலத்தில் அரசுரிமை பெற்றுக் கொள்ளப்பட்ட இரு முறைகளும் எவை? (2 புள்ளிகள்)

ii) அரசனுக்குரிய கடமைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii) அனுராதபுர காலத்தில் நீதித்துறை தொடர்பாக நிலவிய சட்டதிட்டங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iv) முதலாம் விஜயபாகு நாட்டிற்காற்றிய பணிகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

04.

i) இலங்கையிலுள்ள தொட்டுணரக்கூடிய கலாசார மரபுரிமைகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

ii) இலங்கையின் முற்கால ஆடல் பாடல்கள் பற்றிக் கூறும் நூல்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii) பிறப்பிலிருந்து செய்ய வேண்டிய சடங்குகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iv) இலங்கையின் பண்பாடு மற்றும் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதன் அவசியம் நான்கு தருக. (4 புள்ளிகள்)

05.

i) இலங்கை ஆட்சியாளர்கள் தமது பாதுகாப்புக்கருதி ஈரவலயத்தில் உருவாக்கிய இராச்சியங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

ii) யாழ்ப்பாண இராச்சியம் பற்றி அறிய உதவும் இரு நூல்களைத் தருக. (3 புள்ளிகள்)

iii) இரண்டாம் பராக்கிரமபாகு நாட்டிற்கு ஆற்றிய பணிகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iv) ஆறாம் பராக்கிரமபாகு காலத்தில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

06.

i) ஐரோப்பாவின் புராதன நாகரிகங்கள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

ii) கிரேக்க நாகரிகத்தால் உலகிற்குக் கிடைத்த கொடைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)

iii) கிரேக்க நாட்டின் நாடகக் கலைஞர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)

iv) உரோம நாகரிககால நகர நிர்மாணம் பற்றி சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457